**வத்தேகம நகர சபை**
**கண்டி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வத்தேகம நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த கல்வணய்ஸ் குழாய்கள் (GI) 150 இன் பெறுமதி ஆகிய ரூபா 166,072 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சலுகை அடிப்படையில் விற்பனை செய்ய வேண்டியிருந்த ரூபா 90,000 பெறுமதியான 150 சேதனப் பசளைப் பாத்திரங்களின் பெறுமதி நிலுவை மூலதன உதவி என பெற வேண்டிய கணக்குகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது முன் கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 173,516 இற்கான தொங்கல் கணக்குகின் மீதியினை அறுதியாக இனங்காணப்படாமல் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

1.3.2 பெற வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 09 பெற வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுப் பெறுமதி ரூபா 16,790,882 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 6,698,170 இற்கான மீதிகளில் ரூபா 2,979,896 வும் 2015 ஜுன் 30 திகதி அளவிலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

----------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,680,007 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,403,806ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,276,201 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 நிதி நிருவாகம்

-------------------------

வத்தேகம இலங்கை வங்கியில் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கு 2013 ஏப்ரல் மாதம் முதல் கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அதில் காணப்பட்ட ரூபா 177,915 இற்கான காசு மீதி அத் திகதி முதல் செயற்படாது காணப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

---------------------------------

2.3.1 வீத வரி

---------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,351,469 இற்கான நிலுவை வீத வரி மீதியொன்று காணப்பட்டதுடன், அம் மீதியில் 01 வருடம் மற்றும் 11 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் செலுத்தத் தவறியவர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகையின் கூட்டுத்தொகை ரூபா 742,192 ஆகியுள்ளது.

(ஆ) 06 அரச நிறுவனங்களில் இருந்து 01 வருடம் முதல் 12 வருடங்கள் வரையான காலப் பகுதி முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 299,671 இற்கான வீதவரி மீதியொன்று நிலுவையாகக் காணப்பட்டது.

2.3.2 கடை வாடகை

-------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை ரூபா 131,578 தொகை ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருடத்தை விட மிகையான கடை வாடகை நிலுவை ரூபா 40,020 ஆகும்.

(ஆ) பொதுச் சந்தைக் கட்டிடத்தில் 58 கடைகளில் 07 கடைகள் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட காலம் முதல் மூடப்பட்டு காணப்பட்டது. மேலும், பொதுச் சந்தை தொடர் கட்டிடத்தில் 05 கடைகளில் வாடகையாளர்கள் மற்றும் சபை இடையே சட்ட ரீதியான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கந்துரட அபிவிருத்தி வங்கி அமைந்துள்ள சபைக்கு சொந்தமான கட்டிடத்தின் மேல் மாடியில் 04 கடைகளில் வாடகையாளர்கள் தொடர்ச்சியாக வாடகை செலுத்தியிருந்த போதிலும், கட்டிடத்தின் அடிப்படை பொது வசதிகள் குறைவாக காணப்பட்டமையினால், வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடாமல் தொடர்ச்ச்சியாக மூடப்பட்டு காணப்பட்டது.

2.3.3 நீர்க் கட்டணம்

-------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீர்க் கட்டணம் ரூபா 2,945,707 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரை காலவீச்சில் நிலுவையாகக் காணப்பட்ட நீர்க் கட்டணம் ரூபா 636,972 ஆகும். நீர்க் கட்டணம் தொடர்பான உடன்படிக்கையில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நீர்க்கட்டணம் அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மங்கல கிரி கந்த மற்றும் புஞ்சி மோல ஆகிய 02 நீர்ச் செயற்திட்டங்களில் நீர்மானி பொருத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நீர் நுகர்வோரிடம் ரூபா 200, ரூபா 300, ரூபா 350 அளவில் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தமையால் நீர் நுகர்வோரின் நீர் நுகர்வுக்கு நேரொத்தக் கட்டணம் அறவீடு செய்யும் வசதி தவிர்க்கப்பட்டுள்ளது.

2.3.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,623,937 தொகை ஒன்று கிடைக்க வேண்டியிருந்ததுடன் அவற்றில் ரூபா 232,263 இற்கான நீதி மன்றத் தண்டப் பணம் 2015 ஜுன் 30 திகதி வரை சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.5 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்

1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் பிரிவு 23 மற்றும் 2008 ஜனவரி 25 திதகிய இலக்கம் 1533/16 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 12 வர்த்தக நிறுவனங்களுக்க சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்காமையால் ரூபா 48,000 இற்கான அனுமதிப்பத்திர வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்கான சபையின் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் இணக்கஞ் செய்த போது வெற்றிடப் பதவிகள் 09 காணப்பட்டது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி நிறுவனங்களில் பராமரிப்பு அலகுகளுக்கு தேவையான அடிப்படை இயந்திர உபகரண விநியோகத்தலின் கீழ் பொது நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் ஜனநாயகம் சார் நிருவாக விவகார அமைச்சினால் 2014 திசெம்பர் 19 திகதி Fonton Dating Track வண்டி ஒன்று மற்றும் 2015 பெப்ரவரி 06 திகதி Foton ckroo Cab வண்டி ஒன்று வழங்கியிருந்த போதிலும் இவ் இரண்டு வண்டிகளும் கணக்காய்வுத் திகதி வரை பயன்படுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,520,000 இற்கான பெறுமதியை விட கூடிய 06 சொத்து வகைகள் 04 வருடங்களுக்கும் 12 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதி முதல் பயன்படுத்தப்படாமல் மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சிறுவர் சிறுமியரின் நலன்புரி சேவை ஒன்று வழங்குவதற்காக நீண்ட காலம் முதல் சபையில் நடைபெற்று வந்த கலை ஒன்றியம் 2014 ஆண்டு முதல் செயற்படாத நிலையில் காணப்பட்ட காரணத்தினால் சுமார் ரூபா 193,500 பெறுமதியான சங்கீத உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஈ) ரூபா 43,863 இனை விட மிகையான பெறுமதியை உடைய 35 தொக்கு விடயங்களைச் சேர்ந்த 1193 அலகுகள் 01 வருடம் முதல் 07 வருடங்களை விட மிகையான காலம் முதல் விநியோகிக்கப்படாமல் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது.

3.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

குப்பை பாத்திர செயற்திட்டத்திற்காக முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் மூலம் வழங்கியிருந்த ரூபா 278,350 இற்கான ஏற்பாடுகளை பயன்படுத்தி அங்கீகாரம் இன்றி சுற்றாடல் நிதியம் ஒன்று உருவாகியுள்ளது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பழைய நகர சபை நூலக கட்டிடம் நிர்மாணித்தல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 1,000,000

---

(i) 12x6.6 மீற்றர்கள் அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் பாதியளவு விடய இலக்கம் 12 இன் கீழ் 6 x 6.6 மீற்றர்கள் அளவில் தரை ஓடுகள் பதிக்கப்பட்டு மீதியான பகுதிக்கு தரை ஓடு பதிக்கப்படாமல் காணப்பட்ட காரணத்தினால் கட்டிடம் பயன்தரு விடயம் ஒன்றிற்காக உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பழைய கொங்கிரீட் கூரையின் ஒரு பகுதியில் 1.5மீ x 2.00 மீ. ஆளவில் கம்பி வளை மற்றும் கட்டிடத்தில் கொங்கிரீட் தூண்களில் கொங்கிரீட் தட்டின் மேற்பகுதியில் திறந்த நிலையில் மீதியாக வைக்கப்பட்டிருந்த கம்பிகள் பாதுகாக்கப்பட கூடிய விடயங்கள் ஏதும் அவற்றில் பூசப்படாமையால் துருப்பிடிக்கக் கூடிய நிலையில் காணப்பட்டது.

(iii) கமநல சேவைத் திணைக்களம், சுற்றாடல் அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் அங்கீகாரம் இன்றி மற்றும் அந்த நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியிருந்த சட்டங்கள், விதிகள் மற்றும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்றிய முறையில் பிரதான வாய்கால் ஒன்றிற்கு மத்தியில் அதன் மீது இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நகர சபை வளவில் பாதியளவு பூர்த்தி செய்ய கட்டிடம் - செலவிடப்பட்ட தொகை ரூபா 461,619

---

நகர சபை வளவில் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக 2008 ஆண்டின் போது ரூபா 461,619 தொகை ஒன்று செலவிடப்பட்டு 80 அடி நீளத்தில் மற்றும் 20 அடி அகலத்தில் அடித்தளம் கொங்கிரீட் பண்ணப்பட்டு, 08 அடி உயரத்தில் 01 அடி அளவில் 27 தூண்கள் கொண்ட கட்டிடமொன்று நிர்மாணிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாமல் இடை நிறுத்தப்பட்டுக் காணப்பட்டது.

(இ) பலஹெல பாதையில் மத்திய பகுதி – செலவிடப்பட்ட தொகை ரூபா 242,589

---

மதிப்பீட்டின் பிரகாரம் 1:2½ :5(25 மி.மீ) கொங்கிரீட் கலவையில் பாதையை கொங்கிரீட் பண்ண வேண்டும் எனினும் 2015 பெப்ரவரி 25 திகதி பாதையின் சில இடங்களை உடைத்துப் பரிசோதனை மேற்கொண்ட போது இலகுவாக உடைக்கக் கூடிய மட்டத்தில் பலவீனமான கொங்கிரீட் கலவை ஒன்றின் மூலம் செய்யப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டதுடன் பாதையின் ஒரு இடத்தில் குறுக்கு பக்கமாக வெடிப்படைந்து உடைந்து காணப்பட்டது.

(ஈ) இணைத் தொடர்பு கொங்கிரீட் கற்கள் பதித்தல் நகர சபை அதிகாரப் பிரதேசம் - கட்டம் 01 – செலவிடப்பட்ட தொகை ரூபா 449,720

---

(i) பாதையின் இணைத் தொடர்பு கொங்கிரீட் கற்கள் பதித்திருந்த பகுதியில் இரு ஓரங்களிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு சிறு மதில் மதிப்பீட்டின் பிரகாரம் 9" உயரத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டும். எனினும் 2015 பெப்ரவரி 25 திகதி சில இடங்களில் பரிசோதனை மேற்கொண்ட போது அதனது உயரம் 04 அங்குலமாக காணப்பட்டது.

(ii) பாதுகாப்பு சிறுமதில் 1:2:4 (20 மி.மீ) கலவையில் கொங்கிரீட் போடப்பட்டு நிர்மாணிக்கப்பட வேண்டும். எனினும், சில இடங்களை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது இலகுவாக உடைக்கக் கூடிய விதமாக பலவீனமான கொங்கிரீட் கலவை ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும்

இதற்காக பலகைகள், மணல் மற்றும் கற்கள் போக்குவரத்து செலவு உட்பட கொங்கிரீட் கனமீற்றர் 2.7 இற்காக ரூபா 58,995 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

(உ) நுவரதென்ன பாதையில் இணைத் தொடர்பு கொங்கிரீட் கற்கள் பதித்தல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 411,611

---

(i) இணைத் தொடர்பு கொங்கிரீட் அச்சுக் கற்கள் பதிக்கப்பட்ட பாதையின் இரு ஓரங்களிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு சிறுமதில் (Curb Wall) 09 அங்குல உயரத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டும். எனினும் சில இடங்களில் 2015 பெப்ரவரி 25 திகதி பரிசோதனை மேற்கொண்ட போது அவற்றின் உயரம் 3½ ,4 மற்றும் 5 அங்குல அளவுகளில் காணப்பட்டது.

(ii) மதிப்பீட்டின் பிரகாரம் பாதுகாப்பு சிறுமதில் (Curb Wall) 1: 2: 4 (மி.மீ.20) கொங்கிரீட் கலவையில் நிர்மாணிக்கப்பட வேண்டும். எனினும் சில இடங்களை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது இலகுவாக உடைக்கக் கூடிய மட்டத்தில் மிகவும் பலவீனமான கொங்கிரீட் கலவை ஒன்று போடப்பட்டிருந்தது. எனினும், அதற்காக மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 25,802 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) அடல கஹகொட பாதையில் உடைந்திருந்த பகுதிகளைத் திருத்துதல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 57,100

---

(i) கற்கள் பரப்பப்பட்டு தார் போடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த பாதை அநேகமான இடங்கள் உடைந்து தகர்ந்து காணப்பட்டமையால் அவ் விடயங்களை சரியாக சதுரப்படுத்தி உடைந்த இடங்களை திருத்தம் மேற்கொள்ளாமல் நகர சபை நேர் உழைப்பினை பயன்படுத்தி முறையற்ற விதமாக கொங்கிரீட் போடப்பட்டிருந்ததாக 2015 பெப்ரவரி 25 திகதி பரிசோதனை மேற்கொண்ட போது அவதானிக்கப்பட்டது.

(ii) கல் பதித்து தார் போடப்பட்ட பாதையில் உடைந்து தகர்ந்துள்ள பகுதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக கற்கள் பரப்பி தார் போடுதல் பொருத்தமென அவதானிக்கப்பட்ட போதும் அப் பகுதிகளுக்காக கொங்கிரீட் போடுவது தொடர்பாக தொழிநுட்ப முறைமை தெளிவாகக் காணப்படவில்லை. அத்துடன் கணக்காய்வுத் திகதியாகிய 2015 பெப்ரவரி 25 திகதி முறைசாரா விதமாக கொங்கிரீட் போடப்பட்ட சில இடங்கள் வெடிப்படைந்தும் உடைந்ததும் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(எ) ஒப்பந்ததாரர் சாராரிடம் நிர்மாண வேலைகளுக்கான பில்பத்திரங்கள் மற்றும் அளவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணான மேற்பார்வை செய்த தொழில்நுட்ப அலுவலர்களினால் பில் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு அதே அலுவலர்களினால் பில் பத்திரங்களையும் விதந்துரைக்கும் முறையற்ற நடைமுறையொன்றினை கடைபிடிக்கப்பட்டிருந்தது.

3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் முகாமைத்துவம் ஏதும் இன்றி சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் குவிக்கப்பட்டிருந்தது.

3.6 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

---

குறைந்த வருமானமுடையோர்களுக்கு வினியோகிப்பதற்காக தகரம் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை கோரும் போது நகர சபைக்கு ரூபா 26,875 தொகை ஒன்று செலுத்துவதற்கு நேரிட்டுள்ளது.

3.7 பதவியணிக் கடன்

--------------------------------

நகர சபையில் கடமையாற்றி குண்டசாலை பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று 2003 ஆண்டின் போது பதவியை விட்டுச் சென்றுள்ள எழுதுவினைஞர் அலுவலர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 27,200 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------

4.1 கூட்டிணைந்த திட்டம்

----------------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பெறுகைகள் திட்டம்

---------------------------------

ரூபா 19,627,768 இற்கான மூலதன செலவுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அகக் கணக்காய்வு விடயம் சாட்டப்பட்டிருந்த பெண் அலுவலருக்கு சுற்றாடல் அலுவலர் பதவி மற்றும் குப்பை முகாமைத்துமவ் தொடர்பாக விடயங்களும் சாட்டப்பட்டிருந்தமையினால் அகக் கணக்காய்வு கடமை விடயங்கள் சுதந்திரமாக மேற்கொள்வதற்கு இயலாமை ஒன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) அகக் கணக்காய்வின் மூலம் சபையின் நாளாந்த கொடுக்கல் வாங்கல் பரிசோதனை மேற்கொண்டு, முகாமைக்கு உதவி செய்வதற்காக கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது அகக் கணக்காய்வு அறிக்கை ஏதும் வழங்கியிருக்கவில்லை.

4.4 அகக் கட்டுப்பாடு

-------------------------------

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 17 முதல் நூற்றிற்கு 81 வரையும், 07 செலவு விடயங்களில் நூற்றிற்கு 11 முதல் நூற்றிற்கு 74 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 02 வருமான தலைப்புகளுக்காக பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 20,595,000 இற்கான வருமானத்தினால் உழைப்பதற்கு முடியாதிருந்தது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்